| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 29.01.2026 | |
| CC No.85/2024 | |
| சாட்சி : PW1 | |
| பெயர் : திருமதி.செல்வி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பெருமாள் | தொழில் : கூலி |
| கிராமம் : மரக்காடு | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 45/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும், அவர்கள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். சுமார் இரண்டரை வருடத்திற்கு முன்பு நான் வீட்டில் இருந்த போது மாலை 03.00–3.15 மணியளவில் எங்கள் இடத்தில் பைப் ஓட்டுவதற்காக எதிரிகள் மண்வெட்டி கொண்டு வந்தார்கள். ஏற்கனவே அந்த இடம் சம்மந்தமாக எதிரிகளுக்கும், எங்களுக்கும் பிரச்சனை இருந்தது வந்ததது. அதனால் பிரச்சனையை தீர்த்துவிட்ட பிறகு பைப்பை ஒட்டிகொள்ளலாம் என்று சொன்னேன். அதனால் எதிரி ஆண்டியப்பனிடம் மண்வெட்டியோடு வராதீர்கள் என்று சொல்லி அவரை அவரது பக்கத்து இடத்தில் விட்டுட்டு வந்தோம். ஆனால் அவர் சொல்ல சொல்ல கேட்காமல் எதிரி சுரேஷ்டம் மண்வெட்டியை கொடுத்து எங்களை வெட்ட சொன்னார். எனது மகன் மணிகண்டன் அருகில் இருந்த போது நீ உயிரோடு இருந்தான்டா பிரச்சனை செய்வாய் என்று சொல்லி எதிரி சுரேஷ் எனது மகனை அந்த மண்வெட்டியால் வெட்ட போனார். நான் தடுக்க போன போது எனது தலையில் அந்த மண்வெட்டியை கொண்டு எதிரி சுரேஷ் வெட்டிவிட்டார். எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. மீண்டும் எனது மகனை வெட்ட செல்லும் போது எனது மகன் மண்வெட்டியை பிடித்து கொண்டதால் எனது மகனின் கைகளில் எதிரி சுரேஷ் கடித்து வைத்துவிட்டார். அதனால் வளநாடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் சிகிச்சை எடுத்து கொண்டு மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு 108

ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தார்கள். திருச்சி அரசு மருத்துவமனையில் வளநாடு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். **தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அது அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். தற்போது என்னிடம் காட்டப்படும் மண்வெட்டியை கொண்டுத்தான் ஆஜர் எதிரியாகிய சுரேஷ் என்னை தலையில் வெட்டினார். **அது ச.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 29.01.2026 | |
| CC No.85/2024 | |
| சாட்சி : PW2 | |
| பெயர் : திரு. மணிகண்டன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பெருமாள் | தொழில் : விவசாயம் |
| கிராமம் : மரக்காடு | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 25/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. ஆஜர் எதிரிகளில் இரண்டாவது எதிரி எனது உறவினர். 1வது எதிரியை தெரியும், சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பு செப்டம்பர் மாதம் ஏற்கனவே நான்கு வருடமாக பிரச்சனையில் உள்ள இடத்தில் ஆஜர் எதிரிகள் இருவரும் பைப் ஒட்டுவதற்காக குழிதோண்டுவதற்காக மண்வெட்டி கொண்டுவந்தார்கள். அப்போது நானும், எனது அம்மாவும் இந்த இடம் பிரச்சனையில் உள்ளது. இடப்பிரச்சனை முடிந்ததும் நாங்களே பைப்லைன் சரிபண்ணி தருகிறோம் என்று எதிரிகளிடம் சொன்னோம். எதிரிகள் இருவரும் மீண்டும் மீண்டும் அந்த இடத்திற்குள் வந்தார்கள். ஆண்டியப்பன் வைத்திருந்த மண்வெட்டியோடு அவரை கூட்டிக்கொண்டு பிரச்சனை வேண்டாம் என்று சொல்லி அருகில் அனுப்பி வைத்தோம். ஆனால் அவர் கேட்காமல் மீண்டும், மீண்டும் வந்தார். அப்போது எதிரி சுரேஷ் ஆண்டியப்பன் கொண்டு வந்த மண்வெட்டியை வாங்கி நீ யாருடான என்று என்னை கெட்ட வார்த்யைால் திட்டி நீ இருந்தால் தான் கேட்பா இன்றோடு உன்னை கொலை செய்து விடுகிறேன் என்று சொல்லி அந்த மண்வெட்டியால் என்னை வெட்ட வந்தார். அப்போது எனது அம்மா ஐயோ என்று தடுக்க வந்த போது சுரேஷ் அந்த மண்வெட்டியால் எனது அம்மாவின் தலையில் வெட்டிவிட்டார். மீண்டும் அந்த மண்வெட்டியால் சுரேஷ் என்னை வெட்ட ஓங்கிய போது நான் அந்த மண்வெட்டியை பிடித்து கொண்டேன். நான்

மண்வெட்டியை விடாததால் எனது இடது கை மணிக்கட்டிலும், கட்டைவிரலிலும் கடித்துவிட்டார். அந்த சமயத்தில் எனது அப்பாவும், கருப்பையா மகன் அழகர்சாமியும் வந்துவிட்டார்கள். அவர்கள் வருவதை பார்த்து இன்னைக்கு தப்பித்துவிட்டாய் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல்விடமாட்டேன் என்று இருவரும் மிரட்டி சென்றார்கள். எனது அம்மாவிற்கு அதிகமாக இரத்தப்போக்கு ஏற்பட்டதால் என்னையும், எனது அம்மாவையும் வளநாடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூட்டிட்டு சென்றார்கள். அம்மாவிற்கு காயம் அதிகமாக உள்ளதால் முதலுதவி செய்தார்கள். எனக்கு தடுப்பு ஊசி மட்டும் போட்டு அனுப்பிவைத்தார்கள். எனது அம்மாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். தற்போது ச.பொ.1 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ள மண்வெட்டியால் தான் சுரேஷ் எனது அம்மாவை வெட்டி என்னை தாக்க வந்தார். அந்த மண்வெட்டியில் அந்த சமயத்தில் இரத்தக்கறை இருந்தது. திருச்சி அரசு மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 29.01.2026 | |
| CC No.85/2024 | |
| சாட்சி : PW3 | |
| பெயர் : திரு. பெருமாள் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. கருப்பையா | தொழில் : விவசாயம் |
| கிராமம் : மரக்காடு | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 50/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. அ.சா.2 எனது மகன், ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் மூன்று வருடத்திற்கு முன்பு பகல் 03.00 மணியளவில் எதிரிகள் இருவரும் விவசாய காட்டில் பைப் ஒட்டுவதற்காக மண்வெட்டியோடு வந்தார்கள். அந்த சமயத்தில் நான், எனது மனைவி, எனது மகன் இருந்தோம். எதிரிகள் இருவரும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். நாங்கள் பைப் ஒட்டி தருவதாக சொன்னோம், ஆனால் அவர்கள் கேட்கவில்லை. உங்களை வெட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி எனது மனைவியின் தலையில் அந்த மண்வெட்டியால் சுரேஷ் வெட்டிவிட்டார். எனது மகன் தேக்கும்போது எனது மகனின் இடது கையில் சுரேஷ் கடித்துவிட்டார். தற்போது காட்டப்படும் ச.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மண்வெட்டியால் தான் சுரேஷ் தாக்கினார். அதன்பின்பு வளநாடு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எனதுமனைவியையும், எனது மகனையும் அழைத்து சென்றோம். எனது மனைவிக்கு காயம் அதிகமாக இருந்ததால் அங்கியிருந்து திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2. வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.